# WONDERS OF THE WORLD

5672

THE EDUCATIONAL PUBLISHING Co.,
NUNGAMBAKAM, MADRAS.
1929

RANGOON

உ

நம்பர் 1247 சிவமயம்.

# தன வைசிய இளைஞர் தமிழ்ச் சங்கம்,
## திருவள்ளுவர் நூல் நிலையம்,
## பாகனேரி.

இஃது

ஸ்ரீமான் [illegible] அவர்களால்

இனாமளிக்கப்பெற்றது.

............ ஆண்டு ............ திங்கள் ............ நாள்

தயவு செய்து பேணிப் படியுங்கள்.

# உலக அதிசயங்கள்

எடுகேஷனல் பப்ளிஷிங் கம்பனி

நுங்கம்பாக்கம், சென்னை

1928

விலை அணா 4

The B. N. Press,
Mount Road, Madras.

# முன்னுரை

கிறிஸ்தவ சகாப்தத்திற்கு முன் உலகத்திலும் சிறப்பாய்க் கீழ்நாடுகளிலும், கலைவளமும் சிற்பச் சிறப்பும் இருந்தன வென்பதை மாணவர் அறிய வேண்டியே இச்சிறு நூலைப் பிரசுரித்தோம். அந்நாளிலும் மனிதர்கள் செயற்கரிய செயல்களைச் செய்துள்ளார்கள். கட்டட வேலையில் சிறந்த இஞ்சினியர்களும், மின்சாரமும், நீராவியும் வேறுபல இயந்திரங்களும் இப்பொழுது இருந்தும், இந்நாளில் தாஜ்மஹாலை யொத்த கட்டடம் ஒன்று கட்டப்படவில்லை. ஆகவே பண்டைக் காலத்தில் வாழ்ந்தவர் நாகரிக முதிர்ச்சியும், கலை ஆற்றலும் பெற்றவர் என்பதற்கு வேறு சான்று வேண்டுமோ?

சிறுவர்களிடம் பண்டைக் காலத்துச் சரித்திரங்களைப் படிக்க வேண்டுமெனும் அவாவை ஏற்படுத்தி வைக்கவே இந்நூலைப் பிரசுரித்துளோம்.

E. P. C.

# பொருளடக்கம்


| | | பக்கம். |
|---|---|---|
| 1. | திருவாரூர்த் தேர் | 1 |
| 2. | தாஜ்மஹால் | 9 |
| 3. | பாபிலோன் நகரமும், ஆகாயத் தோட்டமும் | 17 |
| 4. | அதிசயமான தாமிரச்சிலை | 25 |
| 5. | டையனுள் கோயில் | 31 |
| 6. | பிரேத கோபுரம் | 36 |
| 7. | பிரேதஸ்தம்பம் | 40 |
| 8. | ஜுபிட்டர் சிலை | 44 |

# உலக அதிசயங்கள்.

## திருவாரூர் தேர்.


திருவாரூர்த் தேர் உலக அதிசயங்களில் ஒன்ருகக் கொள்ளத்தக்கது. தேர் என்பது இந்தியாவுக்கே உரியது. சிறப்பாய்த் தென்ஞட்டில்தான் சிறந்த தேர்கள் உண்டு. தென்ஞட்டின்கண் உள்ள தேர்களில் சிறந்தது இப் பெரிய திருவாரூர்த் தேராகும்.

திருவாரூர் சிறு நகரங்களில் ஒன்று. சைவர்களால் திவ்விய க்ஷேத்திரமெனக் கருதப்படும் க்ஷேத்திரங்களில் சிறந்ததாகும் இந்நகர். நாயன்மார்கள் இவ்வூரையும், இதில் எழுந்தருளியிருக்கும் தியாகராயப் பெருமானையும் புகழ்ந்து பாடியுள்ளார்கள். திருவாரூர் தஞ்சைக்கும் மாயவரத்திற்கும் இடையிலுள்ளது.

முன்ஞளில் இவ்வூரைத் தலைநகராகக் கொண்டு சோழமன்னர் சிலர் சோழநாட்டை ஆண்டு வந்தனர். இம்மன்னர் வழிவந்த பெருந்தகை ஒருவன் 'மனு நீதிச் சோழன்'

எனப்படுவான். அப்பெரியான் அறவழி நின்றுபடி காத்து வந்தான்.

அறத்தையே கோலாகக் கொண்டு கோமகன் தரணி காக்கின், ஜனங்களுக்குக் குறையேது? தாம் பெற்றதொன்று கொடுப்பதற்கே என்னும் கொள்கை யுள்ள மாந்தர் வாழும் நாட்டில் வறுமை யேது? துன்ப



மேது? இவ்வண்ணம் மன்னவன் ஆட்சியும், பிரஜைகளின் வாழ்க்கையும் இருந்தன.

வெகு நாள் வரை அரசன் புத்திரப் இல்லாதிருந்தான். தவம் பல இயற்றிக் கடைசியில் இறைவன் அருளால் ஓர் ஆண் மகவைப் பெற்றான். மைந்தனும், பெற்

ரோர் மனமும் பார்ப்பவர் கண்ணும் களிக்க வளர்ந்து வந்தான்.

இளவரசனுக்கும் வயது வந்தது. ஒரு நாள் தேர் ஏறி நகரைச் சுற்றிவந்தான். சிறுவன் கண்ணையும் மனதையும் சிங்காரத் தோட்டங்களும் மாடங்களும், ஏழைகள் வாழ் குடிசைகளும் கவரக் கைகளே தேரைச் செலுத்தின [redacted]. ன்

தேர் செல்லும் பாதையில், ஒரு பசுக் கன்று தாயருகில் நின்று துள்ளி விளையாடிக் கொண்டிருந்தது. கையேதேரைச் செலுத்திய தாகையால்இளவரசன்பசுவையும் கன்றையும் பார்த்தான் அல்லன். ஆகையால் தேரின் சக்கரம், கன்றின்மேல் ஏறிவிட்டது. இதைக் கண்ட அரசகுமாரன் அடைந்த துயருக்கு அளவில்லை. கன்றை யிழந்த பசுவுடன் தானும் கதறி நொந்த மனத்தினனாய்க் கோமகன் வீடு சென்றான்.

பசுவோ கதறிக் கதறி அழுதது. கதறுவதால் மாண்ட கன்று உயிர் பெற்று எழுமோ? ‘ஒரு தீங்கும் இழைக்காத என் கன்றைக் கொன்றனனே இளவரசன்!’ என்று உன்னிய பசுவிற்குக் கோபமுண்டா

யிற்று. உடனே கன்று இழந்த பசு மன்னவன் கோயில் சென்று 'ஆராய்ச்சி' மணியை அடித்தது.

பண்டைக் காலத்தில் மன்னவர் தாங்கள் வாழ்வது குடிகளின் நன்மைக்கு என்ற கொள்கை யுடையவர்; மன்னுயிரைத் தம்முயிரேபோல் பாவிப்பர். அவர்கள் அரண்மனை வாயிலில் 'ஆராய்ச்சி மணி' என்னும் பெரிய மணி ஒன்று இருக்கும். குறை யிருப்பவர், வருத்த முற்றவர், நியாயம் வேண்டுபவர் அம் மணியை அடிப்பர். மணி யோசை எந்நேரத்தில் கேட்பினும் சரி; எக்காரியம் இருப்பினும் சரி, வந்தவர் வேண்டுவது செய்யாது அமையார் அம்மன்னர்கள்.

பெருந்தகை மனுநீதிச் சோழன் மணியின் ஓசை கேட்டுச் சும்மாவிருப்பனோ. ஓடோடி, புறவாயிலில் வந்தான். கொம்பால் மணி அடித்துக் கதறிக்கொண்டு நிற்கும் பசுவைக் கண்டு, அதனிடம் சென்று 'வேண்டுவது யாது' எனக் கேட்டான். பசுவோ தன்னைத் தொடருமாறு சாடை காட்டி முன் செல்ல, மன்னவன் பின் சென்றான். பசு தனது கன்று 'செத்துக் கிடக்குமிடத்தில் நின்றது. அரசன் தாங்கொணாத் துயரமுற்று

இப்பசுக் கன்றைக் கொன்றவன் யாவனென அறிந்து வருமாறு கட்டளை யிட்டான்.

'கொன்றவன் தனது திருக்குமாரன். அவன் தேர்ஏறிச் செல்லுங்கால் இக்கன்றுசக் கரத்தில் அகப்பட்டுக்கொண்டது' என்றசெய்தி அறிந்தான். அமைச்சரும், அறவோரும் தடுத்தும் சிறிதும் தாழாது தனது மைந் தனைத் தேர்க்காலிலிட்டுக் கொன்று, பசுவிற்கு நியாயம் செய்தான். இத்தகைய புகழ் பெற்ற பெரு மன்னன் முன்னையோரே திருவாரூர்க் கோயிலையும், தேர்களிற் சிறந்த இத்தேரை யும் கட்டியவர் என்று ஸ்தலபுராணங்கள் கூறுகின்றன.

திருவாரூர்க் கோயில் தென்னாட்டிலுள்ள பெரிய கோயில்களில் ஒன்றாகும். இக்கோயி லின் விஸ்தீரணம் 33ஏக்கர். கோயிலின் மேலை வாயிலை அடுத்தாற்போல் 33 ஏக்கர் விஸ் தீரணமுள்ள குளம் ஒன்று உளது. இதைக் கமலாலயம் என்று கூறுவர். இக்கமலா லயம் புண்ணிய தீர்த்தங்களில் ஒன்று. திரு வாரூரில் பிறந்து கமலாலயத்தில் நீராடிப் பின் காசிக்குப் போய் இறக்கவேண்டுமென்று ஆன்றோர் கூறுவர்.

இவ்வளவு சிறப்புப் பெற்ற ஊரில் தியாக ராயப் பெருமானுக்கென்று செய்யப்பட்டது இத்தேர். இந்தியாவின்கண் ணுள்ள தேர் களுக்கெல்லாம் பெரியது. சிற்பக் கலையில் சிறந்தது. திருவாரூர்த் தேரைப் பாராதான், கண் பெருதான் என்று சொல்வதுண்டு. அத் தேரை முக்காலே மூன்று வீசம் தேர் என்பர். முழுத்தேர் கட்டினல் அது பரந்து போய் விடும் என்று ஓர் ஐதீகம் இருப்பதால் இது வரை எங்கும் முழுத் தேர் கட்டப்படவில்லை. தேர் சாத்திரம் படித்த தச்சர்களும் முழுத் தேர் கட்டமாட்டார்கள்.

பங்குனி மாதத்தில் திருவாரூரில் நடக் கும் உற்சவத்திற்குப் போயிருப்பவர், இப் பெரிய தேரோட்டக் காட்சியைப் பார்த்திருப் பர். அலங்காரம் செய்யப்பட்ட தேரின் உச்சி வானளாவி நிற்கும் காட்சியும், அது மலையே நடந்து வருவது போல் இராஜ வீதியில் ஓடும் பெருமையும், அதிர் வெடியும், வாத் திய கோஷமும் யார் மனதைத்தான் கவ ராது.

இத்தேரைத் திருவாரூரில் இருக்கும் சில கொத்தன்மார்களால்தான் ஓட்ட முடியும்.

அவர்களுக்கென மான்யமும் கோவில் வருமானமும் உண்டு. தேர் சோடிப்பதும், அதை ஓட்டுவிப்பதுந்தான் அவர்களது வேலை. தேர் நிலையைவிட்டுத் தெற்கு வீதி முனை வந்ததும், மேலைக் கோபுரத்திற்கும் கமலாலயத்திற்கும் இடையில் போகவேண்டும். அவ் வீதியோ அகலக் குறைவானது. அவ்வீதியில் தேரைப் திருப்புவதும், ஓட்டுவதும் ஓர் ஆச்சரியச் செயலாகும்.

தெற்கு வீதி முனை வந்ததும், தேகப் பயிற்சிஉபாத்தியாயர் மாணவர்களைப் பார்த்து 'வலது பக்கம் திரும்புக' என்றதும் அவர்கள் சட்டென்று திரும்புவது போல், தேரும் கடிதின் திரும்பும். இதைப் பார்க்க ஏராளமான ஜனங்கள் வந்து போவர். அக்கொத்தர்களைத் தவிர மற்றவர் இவ்வாறு தேரைத் திருப்ப முடியாது.

இத்தேரை இழுக்க ஐயாயிரம் பேருக்கு மேல் வேண்டும். மாலை வடம் என்ற இரண்டு பெரிய வடத்திற்கு, வடம் ஒன்றினுக்கு ஆயிரம் பேர் வீதம் நின்று தேரை இழுப்பர். மற்றவர் உள் வடங்களை இழுப்பர். சிற்சில சமயங்களில் இத்தேர் நிலைக் குப் போகாது பல மாதங்கள் இருந்து

விடுவதுமுண்டு. எனவே இது ஒரு அதிசய மல்லவா ?

மூன்று வருஷங்களுக்கு முன்தான் இத்தேர் தீக்கிரையாயிற்று. இப்பொழுது தென்னாட்டிலுள்ள செல்வர்கள் இச்சிறப்புப் பொக்கிஷம் போயிற்றே என்று வருந்திப் புதியதாய் ஒரு தேரைக் கட்டி முடிக்க முயன்று வருகின்றனர். வேலையும் நடந்து வருகிறது. எனினும் 'அதைப்போன்ற ஒரு தேரைக் கட்டி முடிக்க முடியுமோ? சிறந்த வேலைக்காரர் உளரோ ?' என்று பலர் ஐயமுறு கின்றனர்.


# தாஜ்மஹால்.

வட இந்தியாவின்கண் ஆக்ரா என்னும் நகர் ஒன்று உண்டு. அந்நகரை அலங்கரித்து நிற்கும் தாஜ்மஹால் என்னும் சிறந்த கட்டடம் உலகத்திலுள்ள அதிசயங்களில் ஒன்ருகும். இந்துக்கள் புண்ணிய நதிஎன்றுகொண்டாடும் யமுனு நதிக் கரையில் இந்தத் தாஜ் மஹால் கட்டப்பட்டுள்ளது. இவ்வுலகத்திலுள்ள அழகிய சிற்பக்கலை நிறைந்த கட்டடங்களுக் கெல்லாம் நாயகமாகும் இது. எல்லா நாட்டாரும் இம்மஹாலின் உயர்வையும் அழகையும் காண வருடா வருடம் அக்ரா வந்து போகின்றனர். இதைப் பார்த்தவர் அடையும் வியப்பு சிறிதல்ல வென்பது, தாஜ்மஹாலைப் பார்வையிட்ட மேனுட்டார் பலர் எழுதியுள்ள நூல்களிலிருந்து நன்கு புலனுகும்.

இம்மஹால் முழுதும் சலவைக் கற்களாலும் பளிங்குக் கற்களாலும், அமைக்கப்பட்டு நவரத்தினங்களால் அழகு செய்யப்பட்டுள்ளது. பார்த்தவர் கண்ணைப் பறிக்கும் இச்சிறந்த கட்டடம் பல ஆண்டுகளுக்கு முன் இந்து முகமதியச் சிற்பிகளால் நிர்மாணிக்கப்

பட்டது என்ருல் இந்தியாவின் பண்டைச் சிற்பவளம் எத்தன்மையது என்பதை எளிதில் உணரக்கூடும்.

இம்மஹால் யமுனநதியின் தென் கரையில் ஆற்ருேரமாய் அமைந்துளது. ஆக்



கிராக் கோட்டையிலிருந்து செல்லும் பெரிய வீதியின் நடுவில் அவ் வீதியை இரு கூருகப் பிரித்து நிற்கின்றது இச்சிறந்த தாஜ் மஹால். இதைச்சுற்றி மதிலும், பெரியதோட்டமும், அன்னசத்திரங்களும் இருக்கின்றன. யாத்திரிகர்களுக்கெனப் பல விடுதி

களும் தோட்டத்தினுள் அமைக்கப்பட்டுள் ளன. தோட்டத்தினுள்ளும் ஒரு பெரிய கோ புரமுண்டு. இதன் வழியாகத்தான் மஹாலி னுட் செல்லவேண்டும். இக் கோபுரத்தின் உயரம் 100 அடியாகும். இது செம்மணற் கற்களால் சமைக்கப்பட்டுள்ளது.

சலவைக் கற்களாலும், நவரத்தினங் களாலும் கட்டப்பட்டது இம்மஹால். எனின் பல கோடி ரூபாய் இதற்கெனச் செலவழிந்திருக்கு மல்லவா ? 'இத் தகைய சிறந்த கட்டடம் இவ்வளவு செலவில் யாரால் கட்டப்பட்டது ? எதற்காகக் கட்டப் பட்டது ? என்பவற்றை இந்தியரானோர் அறியவேண்டுவது அவசியமல்லவா ?

பதினாறுவது நூற்றாண்டின் இடையில் இந்தியாவில் முகமதியரின் அரசாட்சிஏற்பட் டது. பின்னர் முதன் முதலாகப் பேபர் என் னும் மொகலாயமன்னன் இந்தியாவில்டில்லி யைத் தலைநகராகக் கொண்டு ஓர் இராஜ் யத்தை ஸ்தாபித்தான். அவனது பேரனான அக்பர் காலத்தில் மொகலாய ஆட்சி தக்ஷி ணம் வரை பெருகியது. அம்மன்னன் இந்தி யர் நட்பை நாடி இந்து முகமதிய வேற் றுமையில்லாது நல்லரசாட்சி செலுத்தினன்.

மொகலாய இராஜ்யம் நிலை நிற்கவேண்டு மாயின் இந்துக்களின் நட்பு அவசியம் என் பதை அறிந்து அவன் சில இரஜபுத்திர மாதர்களையும் மணந்துகொண்டான். அவ னது பேரனான ஷாஜஹான் என்பவன்தான் இத்தாஜ்மஹாலைக் கட்டுவித்தவன். ஷாஜ ஹான் என்னும் மொகலாய மன்னன் 1627-ம் வருஷம் பட்டத்திற்கு வந்தான். அவன் பட்



டத்திற்கு வந்த இரண்டு ஆண்டுகளுக் கெல் லாம் தக்ஷிண தேசத்தில் மொகலாயக் கொடி யின் கீழிருந்த சிற்றரசன் கலகம் விளைத் தான். அதை அடக்க 1629 சென்முன் ஷாஜ ஹான். அதுகாலை அவனது அருமை மனைவி மும்தாஜ்மஹாலும் கூடச் சென்ருள். சென்ற மும்தாஜ் பூர்ணகர்ப்பணி. சென்ற விடத்திலேயே தனது கடைசிக் குழந்தை

யைப் பிரசவித்துக் காலமானுள் அரசி. அவ்வரசியின் ஞாபகார்த்தமாகத்தான் ஷாஜஹான் இத்தாஜ்மஹாலைக் கட்டுவித்தான்.

இதைப் பற்றிய கதை ஒன்று உண்டு. ஷாஜஹானுக்குப் பதினைந்தாவது வயதில் அவன் தந்தை ஜிஹாங்கிர் மும்தாஜை மணம்



செய்துவித்தான். ஷாஜகானுக்கு வேறு மனைவிகளும் உண்டு; எனினும் மும்தாஜின் மேல் தான் அவனுக்குப் பிரியம் அதிகம். இருவரும் நகமும் சதையும்போல் வாழ்ந்து வந்தனர். ஷாஜஹான் பட்டத்திற்கு வந்து இரண்டு ஆண்டுகள் கழிந்ததும்

மும்தாஜ் கர்ப்பவதியானாள். கர்ப்பம் முதிர முதிர, மஹாராணி பலஹீன மடைந்தாள். ஒரு நாள் தன் வயிற்றினுள் இருக்கும் குழந்தையின் அழுகைக் குரல் அவள் காதிற் கேட்டதாம். அதைக் கேட்ட அரசி தான் இனிப் பிழைத்திருக்க முடியாதென மதித்து தோன்ற மன்னவனை அழைத்து வரச்செய்தாள். காதலன் வந்ததும் அவன் திருமுகம் நோக்கி, "அரசே! இனி நான் உயிர்வாழமுடியாது என்றே நினைக்கின்றேன். இதுவரைத் தங்களிடம் ஏதாவது பிழை இழைத்திருப்பின் மன்னிக்க வேண்டுகின்றேன். நிற்க, நான் இரண்டு வரங்களை வேண்டுகின்றேன். அருள்வீரோ?" என மனைவி இரக்கமுடன் கேட்க, மன்னவன் சிறிதும் தாழாது 'தந்தேன்' என்றான்.

'தந்தேன்' என்ற சொல் கேட்டு மலர்ந்த முகத்தினளாய் மும்தாஜ், 'மன்னவா! தங்களுக்கு ஆண்டவன் அருளினால் நான்கு பிள்ளைகளும் நான்கு பெண்களு மிருக்கின்றனர். தங்களது சந்ததி பெருக அவர்கள் போதும். வேறு ஸ்திரீகளைக் கொண்டு குழந்தைகளைப் பெற்று, என்

மக்களும் அவர்களும் சண்டையிட்டு மாளு மாறு செய்தல் வேண்டா! இதுவே எனது வேண்டுகோள்,' என்ருள்.

'பெண்ணே, அப்படியே ஆகட்டும், இந்த வாழ்க்கையில் வேறு ஸ்திரீகள் உறவை நாடமாட்டேன். இரண்டாவது வரத்தைக் கேள். நீ கேட்பது எனது உயிரே யாயினும் தருகின்றேன்,' என்ருன் ஷாஜஹான்.

'எனது சவத்தைப் புதைக்கு மிடத்தில் உலகம் வியக்கத்தக்கதோர் கோரி ஒன்றைக் கட்டுவித்துத் தங்களேயும் என்னேயும் உலகம் மறவாது செய்யவேண்டு மென்பதே இரண் டாவது வரம்,' என்ருள்.

மனேவி இறந்ததும் மன்னவன் அடைந்த துயருக்கு அளவில்லே. அரசன் சில வருஷங்கள் வரை யாருடனும் பேசவில்லே. இராஜாங்க விஷயத்திலும் அவனது ஊக்கங் குன்றிற்று. இவ்வாறு காலத்தைக் கழித்த மன்னன் தன் மனேவிக்குத்தான் கொடுத்த வாக்குறுதியை மறக்கவில்லே. தேர்ந்த சிற்பிகளேயும் கட்டட வேலேக்காரர்களேயும் அழைத்து ஒரு மஹாலேக் கட்டுமாறு 1632-ம் வருஷம் ஏவினுன்.

இந்துஸ்தானத்திலிருந்த சிறந்த வேலைக்காரர்கள் ஊக்கமுடன் வேலைசெய்து 1643-வது வருஷம் கட்டடத்தைக் கட்டிமுடித்தனர். அதாவது பன்னிரண்டு ஆண்டுகள் பிடித்தன இக்கட்டடம் முடிய. இதற்கெனச் செலவான ரூபாய் 9 கோடியே 17 லட்சம் என்று கூறப்படுகிறது.

-- ஒன்பது கோடிக்குமேல்செலவு செய்து, பன்னிரண்டு வருடங்கள் சிறந்த கீழ்நாட்டுச் சிற்பிகளைக் கொண்டு வேலை செய்விக்கப் பட்டது இக் கட்டடத்தின் உயர்வு சிறிதாகுமோ !


---

# பாபிலோன் நகரமும் ஆகாயத் தோட்டமும்.

பாபிலோன் என்னும் சிறந்த நகரம், பண்டைக்காலத்து நாகரிகம் நிறைந்த நாடுகளில் ஒன்று. அஃது ஆசியாகண்டத்தைச் சேர்ந்த பாபிலோனியா நாட்டின் தலைநகராய் முன்னாளில் விளங்கியது. பாக்டாட் என்னும் நாட்டிற்கு ஐம்பது மைல் தூரத்தில் யூபிரேட்ஸ் என்னும் பெரிய நதியின் கரையோரத்தில் அப் பாபிலோன் நகரம் அமைந்திருந்தது. காவியக்காரரும் ஓவியக்காரரும் அதன் அழகையும் ஓவியச் சிறப்பையும் பாடியும், எழுதியும் புகழ்ந்துள்ளார்கள்.

சீரிலும் சிறப்பிலும் செல்வ வளத்திலும் பேர்போன அந்நகரம், யாரால் எப்பொழுது ஆக்கப்பட்டது என்பது இன்னும் சரித்திரக் காரர்களால் நிர்ணயிக்க முடியவில்லை. ஆனால் கிறிஸ்தவ சகாப்தம் ஆரம்பமாவதற்கு இரண்டாயிர வருஷங்களுக்கு முன்னரே அந்த நகரம் நிம்ரோத் என்னும் அரசனால் நிர்மாணிக்கப்பட்டது, என்று சிலர் கூறுகின்றனர். பிறகு, அவ்வரசனுக்குப் பின் வந்த பீலஸ் என்னும்

அரசன் இந்நகரத்தைச் சிறக்கச் செய்தான்.



பீலஸின் வழி வந்த ஸமிரமிஸ் என்னும் அரசி பொருத்தி தேர்ந்த சிற்பிகளைக்கொண்டு

அந்நகரைக் கண்டவர் அதிசயிக்கும் வகையில் கட்டி முடித்தாள். கடைசியாக நேபுகாத்நேச்சர் என்னும் அரசர் குறை யொன்றுமில்லா வகைப்புதுப்பித்தும்,பழுது பார்த்தும், விசாலப்படுத்தியும் முடித்துவைத் தார். அதுமுதல் பாபிலோன் உலகத்தின் ஓர் அதிசயமாயிற்று.

பாபிலோன் நகரம் மிக விசாலமானது. அந் நகரத்தின் சுற்றளவு அறுபது மைல் என்று சரித்திரங்கள் கூறுகின்றன. இப்பொ ழுது நகரங்களில் சிறந்தது எனக் கொண் டாடப்படும் லண்டன்மாநகரைவிட ஏழு அல்லது எட்டு மடங்கு விசாலமானது பாபி லோன். அந்நகரத்தைச் சுற்றி வானளாவும் கோட்டை மதில்கள் இருந்தன. அந்நகரின் கோட்டைக்கு, பக்கத்திற்கு இருபத்தைந்து வாயில்கள் வீதம் நூறு வாயில்கள் இருந் தன.ஒரு வாயிலுக்கும் மற்றொரு வாயிலுக்கும் இடையில் பத்தடி உயரத்திற்குக் குறையாத மூன்று கோபுரங்கள் மதிலை அலங்கரித்து நின்றன. எனின் கோட்டை மதில்களின் சிறப்பு எத்தன்மையதாய் இருக்க வேண் டும்?

பாபிலோன் நகரத்தில் இருந்த மொத்த வீதிகள் ஐம்பது. அவை மிகவும் விசாலமா னவை என்று சரித்திரக்காரர்கள் கூறிவைத் திருக்கின்றனர். சில இராஜ வீதிகளின் அக லம் 150 அடிகள் என்று சொல்லப்படுகின் றது. இந்நாளில் அவ்வளவு பெரிய வீதி களைக் காணவும் முடியாது. இருக்குமிடங்களை ரூபாயாகமாற்றமுயலும்இக்காலமாந்தர் நிலங் கள் வீணுவதைக் காணச் சகியார் அல்லவா?

இனி, நகரத்தைச் சுற்றி அரணுய் அமைந்த மதில்களின் சிறப்பைப் பார்ப் போம். மதில்களின் உயரம் 350 அடி ஆகும். அகலமோ வெனின் 87 அடி. எனவே மதி லின் மேல் கஷ்டமில்லாது ஆறு ரதங்கள் ஒரே காலத்தில் செல்ல இயலும். இதைக் கண்டவர் கேட்டவர் வியக்காதிரார்.

மதில்களைச் சுற்றி அகழ் ஒன்று உண்டு. பண்டைக்காலத்தில் அரசர்கள் தங்களது கோட்டையைச் சுற்றிப் பெரிய அகழிகள் தோண்டுவது வழக்கம். விரோதிகள் இலகு வாய்க் கோட்டைக்குள் நுழைய முடியாமற் செய்யத்தான் இந்த அகழிகள் அமைக்கப் பட்டுவந்தன. தஞ்சையின்கண் உள்ள

அரண்மனையைச் சுற்றி இன்றும் அகழிகள் இருக்கின்றன. அவை இப்பொழுது சீர்கேடான நிலைமையில் இருக்கின்றன. தஞ்சையில் மஹாராட்டிய மன்னர் ஆட்சி செலுத்திய காலை, அக்கோட்டையும் அகழியும் அமைக்கப்பட்டவை. இந்நாளில் கோட்டையும் அகழிகளும் இருப்பதில்லை. ஏன்? அந்தக் காலத்துப் போர்க் கருவிகளைப் போன்றவைகளல்ல இந்தக் காலத்துப் போர்க் கருவிகள். ஆகாயவிமானங்களும், பல மைல் தூரம் செல்லும் பீரங்கிகளும், அகழியையும், கோட்டையையும் விடச் சிறந்த காப்பாகாவோ? பாபிலோனைச் சுற்றியிருந்த அகழிகள் ஒரு பெரிய ஆறு போல் இருந்திருக்க வேண்டுமல்லவா? பெரிய படகுகள் செல்லக் கூடிய அவ்வளவு ஆழமும் அகலமும் உடையவை அந்த அகழிகள்.

பாபிலோன் நகரத்தைக் கடைசியாகப் புதுப்பித்துக் கட்டிய நேபுகாத்நேச்சர் என்னும் அரசர் மேதியா என்னும் நாட்டு அரசனது புத்திரியைக் காதலித்து அவளை மணந்தார். அவ்வரச புத்திரியின் பெயர் அமித்திஸ். அம்மன்னன் அவளை மணந்தபிறகு,

தன் மனைவி மாலை வேளையில் உலவி மகிழும் பொருட்டு என்ன செய்வது என்று யோசித்து வந்தார்.

இப்படி யோசித்துவரும் அரசனுக்கு ஆகாசத் தோட்ட மொன்றை உண்டாக்க வேண்டும் எனத் தோன்றியது. அந்நகரில் வறுமையில்லையாதலால், கலைவளம் நிறைந்திருந்தது. சிறந்த சிற்பிகள் பலர் இருந்தனர். உடனே அரசன் சிற்பிகளையும் தோட்டவேலைக் காரர்களையும் அழைத்து ஆகாசத் தோட்ட மொன்றை நிர்மாணிக்குமாறு ஏவினான். சில வருஷங்களில் வேலையும் முடிந்தது.

இத்தோட்டம் பக்கத்திற்கு நானூறு அடியுள்ளது. ஆகவே இத்தோட்டத்தின் சதுர அடி 1,60,000 ஆகும். 390 அடி உயரமுள்ள மாடம் ஒன்றை அமைத்து அதன் மேல் இத்தோட்டம் நிர்மாணிக்கப் பட்டது. தோட்டத்திற்கு விடும் தண்ணீர் ஒழுகாதிருக்க வேண்டுமல்லவா? அதற்குக் கருங்கற்களால் தளவரிசை போடப்பட்டு ஈயத்தைக் காய்ச்சிவிட்டு நீர் ஒழுகாதபடி செய்தனர். அதன்மேல் செங்கல் தளவரிசைகள் போடப்பட்டன. பெரிய மரங்கள் வேர்

விட்டு வளர்வதற்குப் போதுமான மண் அந்தத் தளவரிசையின் மேல் கொட்டப் பட்டது. நீர் பாய்ச்சுவதற்கெனத் தோட்ட மத்தியில் பெரிய குளமொன்றும் ஆக்கப்பட் டது. குளத்தினின்று கால்வாய்கள் மூலம் தோட்டம் முழுதும் நீர் பாய்வதற்கு வேண் டிய நீர்ப்பாசன வசதிகள் செய்யப்பட்டிருந் தன. இத்தோட்டத்தில் பலவகை மரங்களும் மலர்ச் செடிகளும் பயிர் செய்யப்பட்டிருந் தன. அந்நாள் இந்நகரத்தைப் பார்வையிடச் சென்றவர் இத்தோட்டத்தின் அழகைக் கண்டு பிரமித்துப் போவர். மேனுட்டுச் சரித்திரக் காரர்கள் இத்தோட்டத்தை வெகுவாய்ப் புகழ்ந்து நூல் பல எழுதியுள்ளார்கள்.

எனவே, பூர்வகாலத்தில் இவ்வழகிய பாபிலோன் நகரம் பூலோகத்திலுள்ள நகரங் களில் சிறந்ததாயும், அதிசயங்களில் ஒன்ருயு மிருந்தது. மனதால் நினைக்கவும் முடியாத ஒன்றை அந்நாளில் ஆசியாக் கண்டத்தினர் செய்து முடித்துள்ளனர், என்ருல் பண்டைக் காலத்தில் ஆசியாக் கண்டம் பெற்றிருந்த சிறப்பும் நாகரிகமும் நன்குவிளங்கவில்லையா? சிற்பக் கல்லூரியும், கட்டடவேலை பழகும்

கல்லூரியும் இல்லாத காலத்திலும் செய்வ தற்கு அரிய வேலைசெய்யும் ஆற்றல் பெற் றிருந்தனர் ஆசியா கண்டத்தினர். இத் தகைய நகரையும் தோட்டத்தையும் கீழ்நாடு கள் இன்றுகொண் டிராததற்குக் காரணம் வறுமையே.

---

# அதிசயமான தாமிரச்சிலை.

கருப்பு நிறமுள்ள ஜனங்களைக் கொண்ட ஆசியாக் கண்டத்தார் கீழ் நாட்டார் என்று அழைக்கப்படுகின்றனர். ஐரோப்பாக் கண்டத்தினரான வெள்ளை நிற மனிதர்கள் மேல் நாட்டாராவர். ஆதிகால முதல் சிற்ப வேலைகளில் சாமர்த்தியம் வாய்ந்தவர் ஆசியா கண்டத்தினரே. அதற்கு அத்தாட்சி இந்தியாவிலுள்ள கோயில்களும், கல்வெட்டுச் சிலைகளும், விக்கிரகங்களுமாகும். வடுவூரில் இருக்கும் இராம விக்கிரகத்தையும், சிதம்பரத்திலுள்ள நடராஜப்பெருமானின் அழகையும் கண்டு புகழாதார் இல்லை. எகிப்திய நாட்டாரும் மேல் நாட்டைச் சேர்ந்த கிரேக்கர்களும் சிலைகள் செதுக்குவதில் கைதேர்ந்தவர்கள்.

ரோட்ஸ் என்ற ஒரு நகரத்தில் பெரிய தாமிரச் சிலை ஒன்று இருந்தது. உருவத்திலும், வேலைப்பாட்டிலும் இதற்கு நிகரான சிலை உலகத்தில் எங்கும் இருந்ததில்லையாம். எனவே, இத்தாமிரச்சிலை உலக அதிசயங்களில் ஒன்ருயிற்று.

ரோட்ஸ் என்பது ஆசியாவிற்கும் ஐரோப்பாவிற்கும் இடையேயுள்ள மத்திய

தரைக் கடலிலுள்ள ஒரு தீவு. இத்தீவின் தலை




நகரம் ரோட்ஸ். இது துருக்கிக்குச் சொந்த

மான தீவு. இத்தீவின் நீளம் 30 மைல்; அகலம் 14 மைல். இத்தீவினரே இந்த அபூர்வமான சிலையைச் செய்தனர். அவர்கள் இதைச் செய்ய நேரிட்டதற்கான விருத்தாந்தத்தை பார்ப்போம்.

ரோட்ஸ் தீவில் வசிக்கும் ஜனங்கள் கிரேக்கர்களுடன் ஓர் உடன்படிக்கை செய்து கொண்டு சிநேகபாவத்துடன் இருந்து வந்தார்கள். இப்படியிருந்த தீவினருக்குக் கிரேக்கர் மேல் சிறிது பகை உண்டாயிற்று. பகை உண்டானதும் முன் செய்துகொண்ட உடன்படிக்கை இரத்தாயிற்று. கிரேக்கர் நட்பினின்று நீங்கிய அவர் ஆபத்துக் காலத்தில் தங்களுக்குத் துணை செய்ய வல்ல அரசன் சிநேகத்தைப் பெற விரும்பி எகிப்து மன்னனது நட்பைப் பெற்றனர். அக்காலம் எகிப்து நாட்டைத் தோலமிகோத்தோர் என்பவர் ஆண்டு வந்தார்.

தங்கள் நட்பை விட்டு விலகிய ரோட்ஸ் தீவினருக்குப் புத்தி கற்பிக்கவேண்டி, கிரேக்க நாட்டு அரசாங்கத்தார் ஒரு படையை அனுப்பினர். அச்சமயம் கிரேக்க நாட்டைச் சேர்ந்த மாஸிடோனியா என்னும் நாட்டின்

இளங்குமரன் ரோட்ஸ் தீவினர் பக்கம் துணை நின்று போர் செய்தான். துணைவந்த இளவரசன் தோற்கடிக்கப்பட்டானாயினும் கடைசியாக ரோட்ஸ் தீவினரே வெற்றி பெற்றனர்.

வெற்றியடைந்த அத்தீவினர், தங்களுக்குத் துணை செய்த டெமிட்ரியஸ் என்னும் மெஸிடோனியா இளவரசனுக்கும் யுத்தத்தில் வெற்றிதந்த அப்பாலோ என்னும் அவர்களுடைய வழிபடு கடவுளுக்கும் ஞாபகச் சின்னம் ஒன்று ஏற்படுத்த வேண்டுமென்று தீர்மானித்தார்கள்.

இத்தீர்மானத்தின்படி செய்யக் கோரஸ் என்னும் தேர்ந்த சிற்பியை அழைத்துத் தங்கள் கருமத்தைக்கூறினார்கள். யாவருங்கூடி யோசித்து ஒரு பெரிய தாமிரச்சிலையைச் செய்வதென்று முடிவு செய்தனர். பிறகு சிற்பியும் வேலை துவக்கினான். பாதி வேலை முடியாமுன்னம் இச்சிலை செய்வதற்காகவைத்த பணம் செலவாய்விட்டது. சிற்பியோ செய்யும் வழி தெரியாது தன்உயிரைமாய்த்துக்கொண்டான்.

இதையறிந்த ஜனங்கள் அவனோடு இருந்து வேலைபார்த்துவந்த லாச்செஸ் என்

னும் சிற்பியை அழைத்து, வேலையை முடிக்கும்படி கூறி, அவன் கேட்ட பொருளைக் கொடுத்தனர். சிற்பியும் பனிரண்டு வருஷங்களில் சிலையைச் செய்து முடித்தான்.

இத்தாமிரச் சிலையின் உயரமோ 120 அடி. சிலையின் கையின்விரல் ஒரு சாதாரண மனிதன துகைஅளவுபருமனும்உயரமும்இருக்கும். ரோட்ஸ் நகரத் துறைமுகத்தின் இருபக்கங்களிலுமுள்ள மலைகளின் மேல் இச்சிலை நிறுத்தப்பட்டது. இச்சிலையின் கால்களுக்கிடையில் கப்பல்கள் தாராளமாகப் போகலாம் என்றால் அச்சிலையின் சிறப்பையும் ஆகிருதியையும் கூறல் வேண்டுமோ ?

அச்சிலை அங்கு நிறுத்தப்பட்டு 60 வருஷ காலம் சென்றதும் பூகம்ப அதிர்ச்சி ஏற்பட, அது காலுக்கு மேல் உடைந்து விழுந்துவிட்டது. கி. பி. 684 ஆம் ஆண்டில் அத்தீவின்மீது படையெடுத்துச்சென்ற ஸாரஸென்ஸ் என்னும் வகுப்பார் அச்சிலையை உடைத்துப் பொடியாக்கி ஒரு வியாபாரியினிடம் விற்றுவிட்டனர். அவ்வியாபாரி அத்தாமிரத்துண்டங்களை 900 ஒட்டகங்களின் மேல் ஏற்றிக்கொண்டு போனான் என்றால் அத்தாமிரத்தின் எடையை ஊகித்து உணர்தல் முடியாதோ ?


# தையனுள் கோயில்.

துருக்கித் தேசத்திற்கு மேற் பாகத்தில் அயோனியா எனப் பெயர்பெற்ற நாடொன்று உண்டு. அந்நாட்டின் தலை நகரம் இபேசு நகரமாகும். இந்நகரம் கிரேக்க நாட்டைச் சேர்ந்த ஆதென்ஸ் என்னும் நகரத்தில் ஆட்சி செய்து வந்த அரசனது புத்திரனுன அந்திரோஸ் என்பவனுல் கட்டப்பட்டது.

எபேசு நகரம் சிறந்த ஒரு துறைமுகப்பட்டினம். அந்நாளில் இங்கு வியாபாரம் மிகவும் வளர்ச்சி யடைந்திருந்தது. பல நாட்டார்கள் வியாபாரத்தின் பொருட்டு இவ்விடம் வருதுண்டு. இந்நகரத்தில் வியாபாரவளர்ச்சியும் செல்வப் பெருக்கும் ஏற்பட யுத்தங்களும் ஏற்பட்டன. யுத்தத்தால் இந்நகரம் பன்முறை அழிந்துபோயும், மீண்டும் மீண்டும் கட்டுவிக்கப்பட்டது.

கிரேக்கர்களின் குல தெய்வமாகிய தையனுள் தேவிக்கு இந்நகரத்தில் ஒரு கோயில் கட்டப்பட்டது. லாட்டினைத் தாய்பாஷையாகக் கொண்டவர்களுக்கும் இத்தேவி குல தெய்வமாவாள். லத்தீன் வகுப்பார் தையனுள்

என்றும், கிரேக்கர் ஆர்ட்டெமிஸ் என்றும்



அத்தேவியை அழைப்பர்.

பண்டைக் காலத்தில், கிறிஸ்தவ மதம் பரவுவதற்கு முன்னர், கிரேக்கரும், மற்ற ஐரோப்பிய நாட்டாரும் பல தெய்வங்களை வழிபட்டு வந்தனர். அவர்களது பெருந் தெய்வம் ஜுபிட்டர். இந்த ஜுபிட்டருக்கும் லட்டோனு தேவிக்கும் பிறந்தவள் தையனுள் தேவி. தையனுள் தேவியின் சகோதரன் பெயர் அப்பாலோ.

கிரேக்கர்களும் லத்தீன்வகுப்பாரும் சேர்ந்து தையனுள் தேவிக்கு ஒரு பெரிய ஆலயத்தைக்கட்டி வைத்தனர். அந்தஆலயத்தைக் கட்டியவன் கெரிஸிப்ரோன் என்னும் பெயர் கொண்ட ஒரு பெரிய சிற்பி. இபேசு நகரத்திற்கும் அங்குள்ள துறைமுகத்திற்கும் இடையில் இவ்வாலயம் அமைக்கப்பட்டது. இந்த ஆலயம் இரண்டு அல்லது மூன்று வருஷங்களில் கட்டப்பட்டதல்ல. இபேசு நகரத்தாரும் அதற்கு அருகிலுள்ள ஊராரும் ஒன்றுய்ச் சேர்ந்து 220 வருஷங்கள் வேலை செய்து இதைக் கட்டி முடித்தனர்.

ஆலயத்தின் நீளம் 465 அடி, அகலம் 200 அடி ஆகும். கோயிலில் உள்ள தூண்களின்தொகை 172 ஆகும். தூண்களின் உயரம்

60 அடி. கிரேக்க நாட்டுச் சிற்பிகளால் செய்யப்பட்ட உயர்ந்த சிலைகளெல்லாம் இக் கோயிலுக்குள் வைக்கப்பட்டன.

இத்தையனுள் தேவி ஆலயம் பலமுறை விரோதிகளால் அழிக்கப்பட்டது என்றாலும், ஜனங்கள் சலிக்காமல் இதைப் புதுப்பித்து வந்தனர். இவ்வாலயத்தை அழித்தவர்களில் ஏராஸ்டிரேட்ஸ் என்பவனும் ஒருவன்.

ஏராஸ்டிரேட்ஸ் என்பவன் இபேசு நகரத்து வாசி. அவனது முன்னோர் கைக் கொண்ட தொழில் வேளாண்மை. முன்னோர் தொழிலைச் சரிவர நடத்தி வந்த இக் குடியானவனுக்கு ஒருநாள், தன் பெயரை உலகம் மறக்காதிருக்கச் செய்ய என்ன செய்வது என்ற சிந்தனை ஏற்படலாயிற்று. “உலகத்தில் அரசர்கள் பெயரும், சிற்பிகள் பெயரும், கலைவாணர் பெயரும் அழியாதிருக் கின்றன. அவர்களும் மனிதர்கள் தானே. குடியானவன் என்றால் அவ்வளவு கேவலமா? என் பெயரும் அழியாது உலகத்தில் நிலவ வேண்டும். இதற்கு என்ன செய்வது. நான் இத்தனை வருஷங்களாகப் பூலோகத்தில் இருந்து என்ன பயன். என்னிடம் பணமு

மில்லை. என்ன செய்வது" என்று ஆலோசித்து வந்தான்.

ஒரு நாள் அவனுக்குத் தன் கீர்த்தியைப் பூலோகத்தில் நிலவும்படிசெய்யவழியொன்று தோன்றிற்று. "நம்முடைய நாட்டில் இருக்கும் தையனுள் தேவியின் கோயில் கீர்த்தி பெற்ற கோயில். இதில் தீவைத்துச் சுட்டெரித்துப் போட்டால், தலைமுறை தலைமுறையாக என் பெயர் அழியாதிருக்கும்," என்று முடிவு செய்துகொண்டான்.

ஒரு நாள் இரவு இக்குடியானவன் ஒருவருக்கும் தெரியாது இக்கோயிலுக்குத் தீயை மூட்டினான். இது, கிறிஸ்து பிறப்பதற்கு 356 வருஷங்களுக்கு முன் நிகழ்ந்த செய்தி. மதில்களும், தூண்களில் சிலவும் தவிர மற்றவை சாம்பராயின.

தீ வைத்த செய்தியை அறிந்த ஜனங்கள் அக்குடியானவனை அடித்துக் கொன்றனர். இக்கோயில் தீக்கிரையாக்கப்பட்ட இரவு தான் மஹா அலெக்ஸாண்டர் மாஸிடோனியாவில் பிறந்தான். ஊக்கமுடைய இபேசு நகர மாந்தர் மீண்டும் அக் கோயிலை முன்னிலும் பன்மடங்கு அழகு பெறக் கட்டி

முடித்தனர். அத்தகைய நகரமும் அக் கோயிலும் இப்பொழுது பாழாய்க் கிடக்கின்ற பரிதாபத்தைச் சரித்திரக்காரர், மனம் வருந்திக் கூறுகின்றனர்.

# பிரமிட்


## அல்லது

# பிரேத கோபுரங்கள்.

எகிப்து நாட்டில் 'பிரமிட்' என்று அழைக்கப்படும் அநேக பிரேத கோபுரங்கள் இருக்கின்றன. இவை இறந்தவர்களது ஞாபகார்த்தமாய்க் கட்டப்படும் கட்டடங்கள். அடி அகன்றும் நுனி சிறுத்தும் இருப்பதே இதன் அமைப்பு.

இத்தகைய கோபுரங்கள் மத்திய எகிப்தில் பல இருக்கின்றன. அவைகளில் மூன்று கோபுரங்கள் மிகவும் முக்கியமானவை. இந்த மூன்றிலும் உயரத்தில் சிறந்த கோபுரம் கியாப்ஸ் என்ற அரசனால்கட்டப்பட்டதாகும். ஆகவே அதற்குக் கியாப்ஸ் பிரேத கோபுரம் என்பது பெயர். இக்கோபுரம் பதின்மூன்று ஏக்கர் விஸ்தீரணமுள்ளது. இதைக் கட்டி முடிக்க 20 லட்சம் வேலைக்காரர்கள் 20 வருஷம் வேலை செய்தனர் என்று கூறப்படுகிறது. இதைக் கட்டிமுடிக்கச் செலவான ரூபாய் 31 லட்சம் என்று ஒரு சரித்திரக்காரர் கூறுகின்றார். இந்தக் கோபுரத்தின் உயரம் 800 அடி.

இக்கோபுரத்தின் தென் மேற்கில் 500



அடி தூரத்திற்கப்பால், ஒரு கோபுரம் இருக்

கின்றது.முதற்கூறிய கோபுரத்தைவிட உயரத்தில் சிறிது தாழ்ந்ததே இது. முதல் கோபுரத்தின் அடிவாரத்தில் நிலவறை ஒன்றும், இரண்டு மாளிகைகளும் இருக்கின்றன. இரண்டாவதில் மாளிகை தவிர மற்றவெல்லாம் இருக்கின்றன. இந்த இரண்டாவது கோபுரம் கியாப்ஸ் அரசனுடைய சகோதரனாலும், அவனுக்குப்பின் பட்டத்திற்கு வந்த அரசனாலும் கட்டப்பட்டது.

இரண்டாவது கோபுரத்தின் அடித்தளத்தின் நீளமும் அகலமும் முறையே 750 அடி ஆகும். உயரம் 457 அடி. வேலைப்பாட்டில் முதல் கோபுரத்திற்குப் எவ்வளவும் பிற்பட்டதல்ல.

மேற்கூறிய இரண்டு பிரேத கோபுரங்களையும்விடச் சிற்ப வேலையில் சிறந்தது மூன்றுவது கோபுரமாகும். இக்கோபுரத்தின் அடிவாரத்தில் மூன்று மாளிகைகள் கட்டப்பட்டுள்ளன. இக்கோபுரத்தின் அகல நீளம் 352 அடி. உயரம் 219 அடி.

ஒவ்வொரு கோபுரத்தின் கீழும் அரசன் அல்லது அரசியின் சவம் அடக்கம் செய்யப்பட்டிருக்கும். மூன்றுவது கோபுரத்தின் கீழ்

அடக்கம் செய்யப்பட்டிருந்த சவப்பெட்டியை ஆங்கிலேயர் தங்கள் தேசத்திற்கு எடுத்துக்கொண்டு சென்றனர் என்றும், அதை எடுத்துச்சென்ற கப்பல் கடலில் மூழ்கிப் போக அப்பெட்டியும் கப்பலின் கதியையடைந்தது என்றும் சரித்திரங்கள் கூறுகின்றன.

உலக யாத்திரை செய்பவர்கள் எகிப்து செல்லாது திரும்பமாட்டார்கள். எகிப்து செல்பவர்கள் இக்கோபுரங்களை உள்ளும் புறமும் சுற்றியும் ஏறியும் பார்த்து மிகவும் வியப்புற்றுத் திரும்புவார்கள். கோபுரத்தின் உச்சியினருகிலுள்ள மாடத்தில் ஏறி நாலா பக்கமும் பார்த்தால் பூமியிலுள்ளவர்கள் கொசுக்களைப் போல் காணப்படுவர்.

நம்முடைய இந்தியாவிலும், சிறப்பாய்த் தமிழ் நாட்டிலும், அநேக ஆலயங்களின் வாயிலில் அமைந்திருக்கும் கோபுரங்கள் இருக்கின்றன. இவை அழகிலும் சிற்ப வேலையிலும் மிகச் சிறந்தவை என்றாலும், இவை எகிப்திய பிரேத கோபுரங்களுக்கு உயரத்தில் நிகராகமாட்டா. இக்கோபுரங்கள் மேகமண்டலங் கடந்து ஆகாயத்தைஅளாவி நாலாயிரம் ஆண்டுகளாய்ப் பார்ப்பவர் அதிசயிக்கும்படி நிலை நின்று வருகின்றன.


# பிரேதஸ்தம்பம்.

இன்று துருக்கி யென்றழைக்கப்படும் நாட்டின்மேற்குப் பாகத்தில்,முன்னுளில் கேரியா எனப் பெயர்கொண்ட சிறந்த நாடு ஒன்று இருந்தது. ஹலிக்கர்னுஸ் என்னும் நகரம் கேரியாவின் தலைநகரம்.அந்நாட்டை யாண்டு வந்த அரசர்களில் ஒருவர் மாஸெலஸ் எனப் படுவர். அவர் ஜனங்கள் மகிழ நாடாண்டு வந்தார்.

அவரது மனைவியின் பெயர் ஆர்ட்டிமிஸியாள். இம்மாது அழகிலும் குணநலத்திலும் சிறந்தவள். சதியும் பதியும் நன்கு இல்லறம் நடத்தி வரும் ஒருநாள், அதாவது கிறிஸ்து பிறப்பதற்கு 353 வருஷங்களுக்கு முன் அரசன் இறந்து போனுர்.

கணவனை இழந்த மாது சொல்லுதற்கு அரிய துயரில் ஆழ்ந்தாள். உயர்ந்த ஆடைகளையும் ஆபரணங்களையும் துறந்தாள். பிறருடன் பேசுவதையும் விடுத்தாள். தன் புருஷன் தகனமான சாம்பலை எடுத்து வந்து ஒரு பானையில் வைத்துக் கொண்டாள். பசித்த வேளையில் அச் சாம்பலை ஜலத்தில் கரைத்

துப் பருகிப் பசிதீர்த்துக்கொண்டாள் அம் மாதராசி. அதுதான் அவளது ஆகாரம்.




இவ்வாறு நாயகனை இழந்து உருகி

வரும் ஆர்ட்டிமிஸியாள், தனது நாயகன் பெயரை உலகம் மறவாது செய்யவேண்டும் என்று நினைத்தாள். அவ்வாறே, கீர்த்தி வாய்ந்த நான்கு சிற்பிகளை அழைத்துத் தனது கணவன் ஞாபகார்த்தமாக ஸ்தம்பம் ஒன்று கட்டுமாறு பணித்து அதற்கு வேண்டிய சாமான்களையும் பணத்தையும் கொடுத்தாள்.

அந்தக் காலத்தில் சிற்பிகளும் மற்றக் கைத்தொழில் வல்லாரும் கூலியின் அளவுக் கேற்ற வேலை செய்பவர்கள் அல்லர். அரசியின் மனம் திருப்தியடையவும்,தங்கள் வேலை யழியாது நிலை நிற்கவும் வேண்டி ஊதியங் கருதாது வேலை துவக்கினர்.

வேலை முடியாமுன்னம் அரசி இறந்து போயினள். வேலைக்கென ஏற்படுத்தி வைக்கப்பட்ட பணமும் செலவாய் விட்டது. வேலையும் பாதிதான் முடிந்திருந்தது. ஏழைச் சிற்பிகள் என்ன செய்வார்கள்! அவர்கள் கூலி கொடுக்க ஆள் இல்லை யென்று வேலையை நிறுத்திச்செல்லவில்லை. தங்களிட முள்ள பணத்தையும், பிரபுக்கள் சிலரிடமிருந்து யாசித்துப் பெற்ற பொருளையும் போட்டு

வெகு பாடு பட்டு அரசி பணித்தவாறு ஸ்தம்பத்தை எழுப்பி முடித்தனர். இந்த ஸ்தம்பம் உலகத்து அதிசயங்களில் ஒன்ருகும். இதை ஆர்ட்டி மிஸியாள் கட்டிய பிரேதஸ்தம்பம் என்பார்கள்.

இந்த ஸ்தம்பத்தின் அடித்தளம் சதுர வடிவானது. நான்கு பக்கத்துச் சுற்றளவு 411 அடி ஆகும். 130 அடி உயரமுடையது. உலக யாத்திரிகர்கள் இந்த ஸ்தம்பத்தையும் பாராது வரமாட்டார்கள். யாத்திரிகர்கள் பலர் இந்தப் பிரேத ஸ்தம்பத்தின் வேலைப்பாட்டைப் பலவாறு புகழ்ந்துள்ளார்கள்.

புருஷன் ஞாபகத்தின்பொருட்டுக் கட்டப்பட்ட இந்தஸ்தம்பம், புருஷன், மனைவி, கட்டிய சிற்பிகள் பெயரையும் புகழையும் ஞாபகமூட்டிப் பலநூறு ஆண்டுகளாக நின்றுவருகின்றது.

# ஜுபிட்டர் சிலை

கிரேக்க நாட்டார் கிறிஸ்து மதம் பரவு முன்னர் இயற்கையை வழிபட்டு வந்த னர். இந்தியாவில் பிறந்தோர் சூரியனையும், வருணனையும், வாயுவையும் வணங்குவது போல் அவர்களும் சூரியனையும், மற்ற இயற் கைப் பொருள்களையும், வணங்கிவந்தனர். கிரேக்கர் வணங்கிய தெய்வங்களுள் மேலான தெய்வம் ஜுபிட்டர்.

நமது நாட்டார் இமயமலையைத் தேவர் களும் கந்தர்வர்களும் பரமசிவனும் வசிக்கு மிடம் என்று கருதுவதுபோல் அந்நாள் கிரேக்கர் ஒலிம்பியஸ் மலையையும், அதன் அடிவாரத்தையும் தெய்வ கணங்கள் வசிக்கும் இடமாகக் கருதினர். அந்த ஒலிம்பியஸ் மலை யில் இருக்கும் தெய்வங்களுக்கு எல்லாம் பெரிய தெய்வமாக அவர்கள் ஜுப்பிட்டரை மதித்தனர். அதனாற்றான் அத்தேவனுக்கு ஜுப்பிட் ஒலிம்பியஸ் எனப்பெயர் வழங்கலா யிற்று.

கிரேக்கர்கள் கல்வி அறிவிலும், சிற்பம் சித்திர சாஸ்திரங்களிலும் நிபுணத்துவம் பெற்றவர். கிறிஸ்து பிறப்பதற்கு நாற்பத்தி

நான்கு வருஷங்களுக்கு முன் அங்கே பிடி



யஸ் என்னும் பெயர்கொண்ட பெரிய சிற்பி

ஒருவனிருந்தான். அவன் தனது தொழிலில் நிகரில்லாதவன். சிலைகள் செதுக்குவதில் அவனை வெல்பவர் எவருமிருந்திலர். அவன் தனது கைவண்ணத்தைக் காட்ட விரும்பி ஜூப்பிட்டர் சிலை ஒன்றைச் செய்துமுடித்தான். அவன் செய்த அச்சிலை அதிசயப் பொருள்களில் ஒன்றென மதிக்கப்பட்டது.

மேலே கூறிய ஜூப்பிட்டர் சிலை, மலையடிவாரத்தில் கட்டப்பட்ட கோயிலினுள், கல்லால் ஆகிய ஓர் உன்னதச் சிம்மாஸனத்தின் மீது உட்கார்ந்திருக்கும் பாவனையாய் ஆக்கப்பட்டது. சிலையின் உடலின்மேற்பாகம் பிறந்த மேனியாக உடையில்லாது அமைக்கப்பட்டது. உடலின்கீழ்ப்பாகம் பல மடிப்புகளாய்த் தொங்குவது போன்ற சால்வையால் மூடப்பட்ட பாவனையாகச் செய்யப்பட்டிருந்தது. சால்வையால்மூடப்படாதமேல்பாகம் உயர்ந்த தந்தத்தாற் செய்யப்பட்டிருந்தது. மேற்படி சால்வை பொன் தகட்டால் செய்யப்பட்டதாகும். மேற்படி சிலையின் வலக் கரத்தில் தந்தத்தாலும் பொன்னாலுஞ் செய்யப்பட்ட வெற்றித் தேவியின் சிறு சிலை நின்றது. இடக் கரத்தில் பஞ்ச லோகத்தினாற் சமைந்த செங்கோல் ஒன்று இருந்தது. அந்தச் செங்

கோலின்மேல் ஒரு கழுகு வடிவம் உட்கார்ந் திருப்பதுபோல் அமைத்து வைத்தான் அச் சிறந்த சிற்பி.

இதைச் சமைத்த பிடியஸ் என்னும் சிற்ப சாஸ்திரி கிரேக்க பாஷையில் ஹோமர் எழுதிய இலியட் என்னும் பெருங் காப்பியத் தில் ஜுப்பிட்டர் ஒலிம்பியஸ் தேவனை வரு ணித்தெழுதி வைத்திருப்பதைப் பார்த்து அந்த வருணனைக் கேற்றவாறு சிலையைச் செதுக்கியுள்ளான் என்று ரோமாபுரியில் இருந்த, ஸிஸரோ என்னும் நாவலர் அவர் செய்த நூல் ஒன்றில் எழுதிவைத்திருக் கின்றார். அந்தச் சிலையைச் சுற்றி மகா அலங் காரமாகச் செய்யப்பட்ட சித்திர வேலைப்பாடு டைய திரைச்சீலை யொன்று தொங்கவிடபட் டிருந்தது என்று கூறுகின்றார்கள். அந்தச் சிலையைப் போய்ப் பார்த்தவர்கள் இது சிலை தானோ அல்லது உயிருள்ள தெய்வமோ என்று சந்தேகிப்பார்கள். பூர்வ காலத்தில் அந்தச் சிலையைப் பார்த்து அதிசயப்படாத வர்கள் இல்லை.

---

PRINTED AT THE B. N. PRESS, MADRAS.

# OUR PUBLICATIONS

## ENGLISH

| | | RS. | A. | P. |
|---|---|---|---|---|
| 1. | Kamban's Kosala (T. N. Seshachalam, B. A. B. L.) | 1 | 0 | 0 |
| 2. | Thoughts for Statesman (T. N. Seshachalam, B. A B. L.) | 1 | 8 | 0 |
| 3. | Sambander | 0 | 4 | 0 |
| 4. | The Triumph of Truth | 0 | 4 | 0 |
| 5. | Vali | 0 | 4 | 0 |

## TAMIL

| | | RS. | A. | P. |
|---|---|---|---|---|
| 6. | மேனாட்டுப் பேரறிஞர் நால்வர் | 0 | 8 | 0 |
| 7. | விசித்திர விளக்கு | 0 | 6 | 0 |
| 8. | உலக அதிசயங்கள் | 0 | 4 | 0 |
| 9. | முப்பெரும் புலவர் | 0 | 4 | 0 |
| 10. | சிறு கதைகள் | 0 | 4 | 0 |
| 11. | புதிய தமிழ் பாலபாடம் | 0 | 2 | 6 |
| 12. | வாலி | 0 | 8 | 0 |